©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 16.00 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 403A] சென்னை, புதன்கிழமை செப்டம்பர் 8, 2021
ஆவணி 23, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

**சட்டமுன்வடிவுகள்:** *பக்கங்கள்.*

எண் 33/2021—தமிழ்நாடு வேளாண்விளை பொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம். .. .. 2-4

எண் 34/2021—தமிழ்நாடு தொழில்யல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டம். .. .. 5-6

எண் 35/2021—தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டம். .. .. .. .. .. .. 7-12

எண் 36/2021—தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டம். .. .. .. .. .. 13-40

**2021 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 – ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/2021

**1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச்சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2020 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

33 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் உள்ள வரம்புரையில் ‘‘ஒன்பது ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்" எனும் சொற்றொடருக்காக ‘‘பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

செல்லுந்தன்மை யுடையதாகுதல்.

3. முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2020 நவம்பர் 30 ஆம் தேதியிலிருந்தும் மற்றும் அது முதற்கொண்டும் சந்தைக் குழுவின் ஒரு தனி அலுவலரின் அதிகாரங்களை செலுத்தும் மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றும் நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டதான முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய தனி அலுவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் 2020 நவம்பர் 30 ஆம் நாள் தொடங்கி மற்றும் ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்தச் சட்டம் வெளியிடப்படும் நாள் முடிவடையும் கால அளவு வரை கூறப்பட்ட தனி அலுவலர்களால் செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டதான, முதன்மைச் சட்டத்தின்படி செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தை குழு அமைக்கப்படுவது நிலுவையில் இருக்கும்போது, சந்தைக்குழு எதனின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கூறப்பட்ட வகைமுறையின் விளைவாக, சந்தைக் குழுக்களின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலமானது, அவ்வப்போது இந்தச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வகைமுறையை திருத்தம் செய்வதன் மூலம் கூறப்பட்ட மூன்று ஆண்டுகள் காலத்திற்கப்பால் நீட்டிக்கப்பட்டது. இறுதியாக, தமிழ்நாடு சட்டம் 31/2020–ன் மூலம் அவர்களுடைய பதவிக் காலம் ஒன்பது வருடங்கள் மற்றும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2. தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் தேதியன்று முடிவடைந்தது. தனி அலுவலர்களின் பதவிக்காலம் முடிவடையும் முன்னரே சேலம், தஞ்சாவூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், விழுப்புரம், சிவகங்கை, மதுரை, ஈரோடு மற்றும் தருமபுரி ஆகிய 14 சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், திருப்பூர், விருதுநகர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், நீலகிரி, காஞ்சிபுரம், நாமக்கல், தேனி மற்றும் பெரம்பலூர் ஆகிய கூடுதலான 10 சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

3. தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் அவர்கள் 30.12.2020 முதல் 26.02.2021 வரையிலான பல்வேறு தேதிகளில் தேனி சந்தைக் குழுவினைத் தவிர மேற்சொன்ன சந்தைக்குழுக்களில் அவர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர். அதன் பின்பு, 2021 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் நாளன்று கூறப்பட்ட 24 சந்தைக் குழுக்களுக்கு பணியமர்த்தப்பட்ட உறுப்பினர்கள் திரும்பப் பெறப்பட்டனர் மற்றும் தனி அலுவலர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

4. மேற்சொன்ன சூழ்நிலைகளில், 2020 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் தேதியிலிருந்தும் மற்றும் அது முதற்கொண்டும் மேலும் ஓர் ஆண்டு காலமாக தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பது மற்றும் கூறப்பட்ட தேதிக்கு அப்பால் கூறப்பட்ட 33 ஆம் பிரிவின்படி தனி அலுவலர்களை பணியில் தொடரப்பட்டுள்ள / அமர்த்தப்பட்ட நடவடிக்கையானது செல்லத்தக்கதாக்குதல் முறையானது மற்றும் அவசியமானதாகும்.

5. எனவே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 27/1989) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

6. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்.*

சென்னை–600 009,
2021 செப்டம்பர் 8.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021 - ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 - ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/2021**

**1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 10/1999.

23—A—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**2.** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 23—A—ஆம் பிரிவில், (1)—ஆம் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1999) 23–A–ஆம் பிரிவின் படி, அரசானது (i) 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் படி அறிவிப்பு வழங்குவதற்காக, (ii) 4–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவிற்கு முதலாம் வகைமுறையின் படி நிலத்தினை கையகப்படுத்துதலிலிருந்து திரும்பப்பெறுதல்; மற்றும் (iii) 25–ஆம் பிரிவின் படி விதிகளைச் செய்தல்; ஆகிய அதிகாரங்களைத் தவிர, ஆட்சியருக்கு அந்தச் சட்டத்தின்படியான அனைத்து அதிகாரங்களையும் ஒப்படைவு செய்துள்ளது. தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதலின் செயற்பாடுகளை விரைவுப்படுத்தும் பொருட்டு மேலும் ஆட்சியருக்கு 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி நிலம் கையகப்படுத்துதலுக்கான அறிவிப்பை வழங்குவதற்கான அதிகாரங்களை மேலும் ஒப்படைவு செய்வதற்கு மற்றும் இந்த நோக்கத்திற்காக கூறப்பட்டச் சட்டத்தினை திருத்துவதென அரசானது, முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு**
*தொழில் துறை அமைச்சர்*

சென்னை–600 009,
2021 செப்டம்பர் 8.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021 - ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130-ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/2021**

2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (a) 3 ஆம் பிரிவானது, 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (b) 4 ஆம் பிரிவானது, 2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (c) எஞ்சியுள்ள பிரிவுகள் அனைத்தும் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/2016.

73 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 73 ஆம் பிரிவில், (1) உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

“(1) “அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இணைப்புப் பட்டியல்கள் எதையும் முன்னோக்கியதாகவோ அல்லது பின்னோக்கியதாகவோ திருத்தம் செய்யலாம், சேர்க்கலாம் அல்லது நீக்கம் செய்யலாம்.

IV ஆம் இணைப்புப் பட்டியலுக்கான மாற்றீடு.

3. முதன்மைச் சட்டத்தில், IV ஆம் இணைப்புப் பட்டியலுக்காக, பின்வரும் இணைப்புப் பட்டியலானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

**"இணைப்புப் பட்டியல்–IV.**

**இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வு.**

**(21 ஆம் பிரிவைக் காண்க)**

**பாடத்திட்டம்.**

**பகுதி–அ. எழுத்துத் தேர்வு.**

அதிகபட்ச மதிப்பெண்கள்–100

குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள்–50.

கால அளவு–3. மணி நேரங்கள்.

பகுதி–1.

(மொழிப் பெயர்ப்பு, கட்டுரை மற்றும் கடிதம் எழுதுதல்). மதிப்பெண்கள்–50.

1. மொழிப் பெயர்ப்பு. மதிப்பெண்கள் –10.
ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிப் பெயர்த்தல்.

2. கட்டுரை (150 சொற்களுக்கு மிகாமல்). மதிப்பெண்கள் 2 X 15 = 30.

(1) தமிழ் மொழியின் சிறப்பு / மாண்பு.

(2) மக்கள் தொகைப் பெருக்கம்.

(3) சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

(4) அனைவருக்கும் கல்வி.

(5) தேசப்பற்று.

(6) ஆன்மீகம் / பக்தி.

(7) ஊரக வளர்ச்சி / கிராமப்புற வளர்ச்சி.

(8) கூட்டுறவு.

(9) மகளிர் முன்னேற்றம்.

(10) சமூக சீர்திருத்தம் / சமூகப்பணி / சமூக சேவை.

(11) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்.

3. கடிதம் எழுதுதல் (அலுவல் கடிதம்) மதிப்பெண்கள் 1 X 10 = 10.

(1) பணியாளர் விடுப்புக் கடிதம்.

(2) ஆண்டு ஊதிய உயர்விற்கான வேண்டுதல் கடிதம்.

(3) துறையில் மேல்நடவடிக்கை எடுப்பதற்காக பதில் கடிதம்.

(4) 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மையச் சட்டம் 22/2005) கீழ் பதிலளிப்பதற்கான முன்னேற்பாடு.

(5) சட்டமன்றப் பேரவை வினாக்களுக்கு பதிலளிப்பதற்கான முன்னேற்பாடு.

## பகுதி–II.

மதிப்பெண்கள் 2 X 5 = 10.

1. புரிதல் திறன்.

2. உரையாடல் எழுதுதல்.

## பகுதி–III.

மதிப்பெண்கள் 40 X 1 = 40.

மொழித் திறமைகளின் மீதான பயிற்சிகள் (1 முதல் 10 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகங்களிலிருந்து).

(1) எண்களை எழுத்து வடிவில் எழுதுதல்.

(2) வாக்கியம் அமைத்தல்.

(3) ஆங்கில, தமிழ் மாதங்கள் மற்றும் வார நாட்களை தமிழில் எழுதுதல்.

(4) எழுத்துக்களின் வகைகளை எழுதுதல்.

(5) இளநிலை மற்றும் முதுநிலை படிப்புப் பிரிவுகளின் பெயர்களை தமிழில் எழுதுதல்.

(6) உயிர்க் குறில் மற்றும் உயிர் நெடிலினை வேறுபடுத்துதல்.

(7) பாலினம் / உயிருள்ளவை / உயிரற்றவைகளுக்கிடையேயான வேறுபாடுகளைக் கண்டறிதல்.

(8) தொழில் நுட்பச் சொற்களை தமிழில் மொழிப் பெயர்த்தல்.

(9) புத்தகதத்தின் தலைப்பு மற்றும் அதன் நூலாசிரியரை எழுதுதல்.

(10) காலங்கள் மற்றும் வினைச் சொற்களை அடையாளங்காணுதல்.

(11) விடைக்கேற்ற வினாக்களை எழுதுதல்.

(12) மயங்கொலி வேறுபாடுகளைக் கண்டறிதல்.

(13) அருஞ்சொற்பொருள்களை எழுதுதல்.

(14) பிற மொழிகளிலுள்ள சொற்களுக்கான தமிழ் வார்த்தையை எழுதுதல்.

(15) பெயர்ச் சொற்களை எழுதுதல்.

(16) வினைச் சொற்களை எழுதுதல்.

(17) சொற்களை அகரவரிசைப்படி எழுதுதல்.

(18) வர்க்க எழுத்துக்களை எழுதுதல் (நிரப்புக).

(19) தமிழ்நாட்டின் சின்னம், மரம், விலங்கு மற்றும் பறவை ஆகியவற்றை எழுதுதல்.

**பகுதி–ஆ. வாய்மொழித் தேர்வு.**

| | அதிகபட்ச மதிப்பெண்கள். | குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள். |
|---|---|---|
| 1. சொல்லோட்டமாகவும், சரிநிலையாகவும் தமிழில் உரையாடுதல். | 100 | 60 |
| 2. கொடுக்கப்பட்ட தலைப்பில் தமிழில் ஓர் ஆணையை சொல்லுதல் அல்லது ஒரு சிற்றுரையாற்றுதல். | 50 | 25 |
| **பகுதி – இ.** | | |
| தமிழில் கொடுக்கப்பட்ட சான்றினை ஆங்கிலத்தில் குறிப்பெடுத்தல் மற்றும் தமிழில் வினா எழுதுதல். | 50 | 25 |
| **பகுதி – ஈ.** | | |
| சரளமாக படித்தல் மற்றும் தமிழில் கைப்பட எழுதப்பட்ட மூன்று மனுக்கள் அல்லது பிற அலுவலக மூல ஆவணங்களை தமிழில் மொழிப் பெயர்த்தல். | 100 | 50 |

**விளக்கம்** :– இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத் தேர்வு) தேர்ச்சி பெற வேண்டிய விண்ணப்பத்தார்களைப் பொறுத்த நேர்வில், பகுதி – D யினை தனியாகவும், மற்ற அனைத்துப் பகுதிகளையும் ஒரே நேரத்திலும் எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

IV ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

4. மாற்றியமைக்கப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் IV ஆம் இணைப்புப் பட்டியலில், –

(1) ''பகுதி –அ. எழுத்துத் தேர்வு'' எனும் துணைத் தலைப்பின் கீழ், ''கால அளவு – 3 மணி நேரங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''கால அளவு – 2.30 மணி நேரங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''பகுதி –ஆ. வாய் மொழித் தேர்வு'' எனும் துணைத் தலைப்பின் கீழ், இனம் – 1 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்காக, பின்வரும் இனம் மற்றும் பதிவுகள், முறையே, மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

| | | |
|---|---|---|
| "1. சொல்லோட்டமாகவும், சரிநிலையாகவும் தமிழில் உரையாடுதல். | 100 | 60<br><br>வரம்புரையாக, மொழி வாரிச் சிறுபான்மையினரைச் சார்ந்த நபர்களைப் பொறுத்த நேர்வில், தேர்ச்சி பெறுவதற்கான குறைந்த பட்ச மதிப்பெண்கள் 50 ஆக இருத்தல் வேண்டும்." |

5. முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளில் தொடங்குகின்ற காலத்தின் போதும், இந்தச் சட்டத்தை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிட்ட தேதி வரையிலும் 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வினை தமிழில் நடத்துவது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், சட்டத்தின்படி செல்லத்தக்கதாக செய்யப்பட்டது அல்லது எடுக்கப்பட்டது எனக் கொள்ளப்படுதல் வேண்டும், அத்தகைய செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செய்யப்படும் அல்லது எடுக்கப்படும் போது, இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டமானது அனைத்துத் தேவையான நேரங்களிலும் நடைமுறையில் இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். செல்லுந்தன்மை.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தமிழை ஒரு மொழியாகக் கொண்டு தேர்ச்சியடையாத விண்ணப்பதாரரின் அடிப்படை தமிழ் மொழித் திறன்களை சோதிப்பதற்கு இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்படுகின்றது. 18.02.2016 தேதியிட்ட, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, அரசாணை (நிலை) எண். 23 –ல், ''இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வின் (பகுதி – அ) எழுத்துத் தேர்வில்'' பாடத்திட்ட மாதிரி மற்றும் பாடத்திட்டமானது திருத்தப்பட்டுள்ளது மற்றும் அந்தத் தேர்வில் தேர்ச்சி மதிப்பெண்ணாக குறைந்தபட்சம் 45 மதிப்பெண்களானது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, 02.03.2017 தேதியிட்ட, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த துறையின், அரசாணை (நிலை) எண்.33–ல், துறை சார்ந்த தேர்வுகள் சீர்த்திருத்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கூறப்பட்ட மொழித் தேர்வின் பாடத்திட்டம் / திட்டம் / பாடத்திட்ட மாதிரியானது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன செயலுறுத்தும் ஆணைகளுக்கு சட்டப்படியான செயல்வடிவம் கொடுப்பதற்காக, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2016 இணைப்புப் பட்டியல் IV–ல் பின்னோக்கிய வகையில் திருத்தம் செய்வதெனவும் கூறப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட செயல் எதையும் மேலும் செல்லதக்கதாகவும் அரசானது முடிவு செய்துள்ளது.

2. மேலும், ஓர் அறிவிக்கையின் மூலம் அந்தச் சட்டத்தின் இணைப்புப்பட்டியல்களை அரசு திருத்துவதை இயலச்செய்ய, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 14/2016–ல் 73 ஆம் பிரிவை திருத்தம் செய்தவற்கு அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர். பழனிவேல் தியாக ராஜன்,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

சென்னை–600 009,
2021 செப்டம்பர் 8.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 – ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2021

**2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) (a) 2,4,5,6,7 மற்றும் 8–ஆம் பிரிவுகளானது, 2021–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 3–ஆம் பிரிவானது, 2021–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/2016. 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில், பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, ''மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர் மரபினர்கள்,'' மற்றும் ''மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்,'' எனும் சொற்றொடர்களுக்காக, இதில் உள்ள சொற்கள் எந்த வரிசையில் இருந்தாலும் மற்றும் ''அல்லது'' அல்லது ''மற்றும்'' அல்லது ''/'' என்ற சொற்களுடன் சேர்ந்திருந்தாலும், அவை வருகின்ற இடங்களிலெல்லாம், ''மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் (வ), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். குறித்த சில சொற்றொடருக்கான குறிப்பீடுகளை பிற சொற்கள் மூலம் மாற்றியமைத்தல்.

3. முதன்மைச் சட்டத்தின் 67–ஆம் பிரிவில்,– 67-ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(i) (1)–ஆம் உட்பிரிவில், ''பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை'' எனும் சொற்றொடருக்காக, ''மனிதவள மேலாண்மைத்துறை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (3)–ஆம் உட்பிரிவில், ''பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம்'' எனும் சொற்றொடருக்காக, ''மனிதவள மேலாண்மை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் I–ஆம் இணைப்புப் பட்டியலில், ''பகுதி– இ'' மற்றும் ''பகுதி– ஈ'' –க்காக பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– I-ஆம் இணைப்புப் பட்டியலுக் கானத் திருத்தம்.

**பகுதி–இ.**

**மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் (வ)**

வன்னியகுல ஷத்திரியா (வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னிகுல ஷத்திரியா உட்பட).

## பகுதி – ஈ.

## மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்கள்

### (A) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்

1. அம்பலக்காரர்
2. அரயர் (கன்னியாகுமரி மாவட்டம்)
3. பெஸ்தா, சிவியர்
4. பட்ராஜு (சத்திரிய ராஜுக்கள் நீங்கலாக)
5. போயர், ஒட்டர்
6. தாசரி
7. டொம்மாரா
8. ஜாம்புவனோடை
9. ஜோகி
10. கொரச்சா
11. இலத்தின் கத்தோலிக்க கிறித்தவ வண்ணார்(கன்னியாகுமரி மாவட்டம்)
12. மோண்ட கொல்லா
13. முட்லகம்பட்டி
14. நோக்கர்
15. பரவர் (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
16. பரவர் வகுப்பில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தை சார்ந்த பரவர் வகுப்பில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட.
17. மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர்) (கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட)
18. முக்குவர் அல்லது முகையர் (கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் உட்பட)
19. புண்ணான் வேட்டுவ கவுண்டர்
20. தெலுகுபட்டி செட்டி
21. தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவார், சில்லவார், தொக்கலவார் தொழுவநாயக்கர் மற்றும் எர்ரகொல்லர் உட்பட)
22. வலையர் (செட்டிநாடு வலையர்கள் உட்பட)
23. வண்ணார் (சலவைத் தொழிலாளர்) (அகஸா, மடிவலா, ஏகாலி, ராஜகுலா, வெலுத்தாடர் மற்றும் ராஜாகா உட்பட) (இவ்வகுப்பு ஆதிதிராவிடர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
24. வேட்டைக்காரர்
25. வேட்டுவகவுண்டர்

**(B) சீர்மரபினர்கள்**

1. ஆத்தூர் கீழ்நாடு கொறவர் (சேலம், நாமக்கல், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்)

2. ஆத்தூர் மேல்நாடு கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

3. ஆப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்)

4. அம்பலக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

5. அம்பலக்காரர் (சூரியனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

6. போயாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்)

7. பட்டு துர்கா

8. சி.கே. கொறவர் (கடலூர் மற்றும் விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்)

9. சக்காளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்)

10. செங்கயம்புடி கொறவர் (திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

11. செட்டிநாடு வலையர் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்)

12. டோம்ஸ் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்)

13. தொப்ப கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

14. டொம்மார்ஸ் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

15. தொங்க போயா

16. தொங்க ஊர் கொரச்சாஸ்

17. தேவகுடி தலையாரி

18. தொப்பை கொரச்சாஸ் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

19. தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

20. தொங்க தாசரி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, சென்னை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

21. கொரல்லா தொட்ட போயா

22. குடு தாசரி

23. கந்தர்வ கோட்டை கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம், அரியலூர் மாவட்டங்கள்)

24. கந்தர்வ கோட்டை கள்ளர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

25. இஞ்சி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

26. ஜோகி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

27. ஜாம்பவனோடை

28. காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்)

29. கல்ஒட்டர் (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

30. கொறவர் (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சென்னை, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்)

31. களிஞ்சி தாபி கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

32. கூட்டப்பால் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

33. காலா கொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

34. கலவதில போயாஸ்

35. கேப்மாறி (செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள்)

36. மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்)

37. மொண்ட கொறவர்

38. மொண்டகொல்லா (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

39. முட்லகம்பட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

40. நோக்கர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

41. நெல்லூர்பேட்டை ஒட்டர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

42. ஒட்டர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்)

43. பெத்தபோயர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

44. பொன்னை கொறவர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

45. பிரமலைக்கள்ளர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்)

46. பெரியசூரியூர் கள்ளர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் )

47. படையாச்சி (கடலூர் மாவட்டத்தில் வெள்ளையன் குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர்)

48. புண்ணாண்வேட்டுவகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

49. சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

50. சேலம் மேல்நாடுகொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், சேலம், நாமக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

51. சேலம் உப்பு கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

52. சக்கரதாமடை கொறவர் (திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

53. சாரங்கபள்ளி கொறவர்

54. சூரமாறி ஒட்டர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

55. செம்பநாடு மறவர் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்)

56. தள்ளிகொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

57. தெலுங்கப்பட்டி செட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

58. தொட்டியநாயக்கர் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், இராணிபேட்டை, வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்)

59. தோகமலைகொறவர்கள் அல்லது கேப்மாறி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

60. உப்புகொறவர் அல்லது செட்டிபல்லிகொறவர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்)

61. ஊராளிகவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

62. வயல்பாடு அல்லது நாவல்பேட்டா கொரச்சாஸ்

63. வடுவார்பட்டி கொறவர் (மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்

64. வலையர் (மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் , திருப்பூர் மாவட்டங்கள்)

65. வேட்டைக்காரர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

66. வேட்டக்கொறவர் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்)

67. வரகனேரி கொறவர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

68. வேட்டுவ கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்)

### பகுதி – உ.

### மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள்.

1. ஆண்டிப்பண்டாரம்
2. எரவல்லர் (இவ்வகுப்பு பழங்குடியின வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
3. இசை வெள்ளாளர்
4. ஜங்கம்
5. கொங்கு செட்டியார் (கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் மட்டும்)
6. குலாலா (குயவர் மற்றும் கும்பரர் உட்பட)
7. குன்னுவர் மண்ணாடி
8. குரும்பா, குரும்பா கவுண்டர்
9. குருகினி செட்டி
10. மருத்துவர், நாவிதர், மங்களா, வேலக்கட்டளவர், வேலக்கட்டள நாயர் மற்றும் பிரனோபகாரி
11. மவுண்டாடன் செட்டி
12. மகேந்திரா, மேதரா
13. நரிக்குறவர் (குருவிக்காரர்)
14. பணிசெய்வான் / பணிசிவன்
15. பண்ணயார் (கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்திகாரர் நீங்கலாக)
16. சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவா (சாத்தானி, சட்டாடி மற்றும் சட்டாட ஸ்ரீ வைஷ்ணவா உட்பட)
17. சோழிய செட்டி
18. தொண்டமான்
19. தொறையர் (நீலகிரி)
20. தொறையர் (சமவெளி)
21. திருநங்கைகள் அல்லது அரவாணி
22. யோகீஸ்வரர்”.”

V–ஆம் இணைப்புப் பட்டியலுக்கான மாற்றீடு.

5. முதன்மைச் சட்டத்தின் V–ஆம் இணைப்புப் பட்டியலுக்காக, பின்வரும் இணைப்புப் பட்டியலானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"இணைப்புப் பட்டியல்–V.

[27(e) மற்றும் 40(1)–ஆம் பிரிவுகளைக் காண்க]

1. பொதுமுறை
2. பட்டியலில் கண்ட சாதியினர் (முன்னுரிமை அடிப்படையின் பேரில் அருந்ததியர்கள்)
3. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (வ)
4. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் அல்லாத பிற)
5. பொதுமுறை
6. பட்டியலில் கண்ட சாதியினர்
7. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்
8. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் அல்லாத பிற)
9. பொதுமுறை
